**செய்தி வெளியீடு எண் : 1957** **நாள் : 07.11.2022**

**செய்தி வெளியீடு**

**மாண்புமிகு தமிழக முதல்வர்** அவர்களின் எண்ணத்திற்கு உரு கொடுக்கும் வகையில் **மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்** அவர்கள் விளிம்பு நிலை மக்களுக்கான பொருளாதார முன்னேற்றமே சமூக நீதியாக அமையும் என்பதில் உறுதியான நம்பிக்கையுடன் 2022–2023–ஆம் ஆண்டிற்கான மானிய கோரிக்கையின் மீதான விவாதத்தின் போது கீழ்க்கண்ட அறிவிப்பை வெளியிட்டிருந்தார்.

**"1000 ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் கால்நடைகளுக்குத் தேவைப்படும் தீவனப்புல் வளர்க்க ஒரு பயனாளிக்கு ஏக்கருக்கு ரூ.10,000/– மதிப்பீட்டில் விதைத் தொகுப்பு மற்றும் புல்கறணைகள் கால்நடை அறிவியல் பல்கலைக்கழகம் / ஆவின் நிறுவனம் மூலம் ரூ.1.00 கோடி செலவில் வழங்கப்படும்".**

2. மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களின் 2022–2023–ஆம் ஆண்டிற்கான அறிவிப்பினை நடைமுறைப்படுத்தும் பொருட்டு 900 ஆதிதிராவிடர் மற்றும் 100 பழங்குடியின மக்கள் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும் வகையில் 900 ஆதிதிராவிடர்களுக்கு ரூ.90,00,000/– (ரூபாய் தொண்ணூறு இலட்சம் மட்டும்) (ரூ.10,000x900 நபர்கள்) மானியமாக ஒன்றிய அரசு நிதியிலிருந்து செலவிட நிருவாக அனுமதி வழங்கியும் மற்றும் 100 பழங்குடியினருக்கு ரூ.10,00,000/– (ரூபாய் பத்து இலட்சம் மட்டும்) (ரூ.10,000x100 நபர்கள்) மாநில அரசு நிதியிலிருந்தும் பெற்று வழங்க வழிகாட்டு நெறிமுறைகளின்படி செயல்படுத்துவதற்கு நிருவாக அனுமதி மற்றும் நிதி ஒப்பளிப்பு வழங்கி அரசாணை(நிலை)எண்.93, ஆதி(ம)பந(சிஉதி)துறை, நாள்.19.10.2022–இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது. இதன்மூலம் ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியின விவசாயிகள் கால்நடைகளுக்கு தேவைப்படும் தீவனப்புல், விதைத்தொகுப்பு மற்றும் புல்கரணைகள் போன்றவற்றை கொள்முதல் செய்து பயன்பெறுவார்கள்.

**அரசு கூடுதல் தலைமைச் செயலாளர்,**
**ஆதிதிராவிடர்மற்றும் பழங்குடியினர் நலத்துறை.**

********************

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in